

டி.எம். கிருஷ்ணா

# டிசம்பர் மேளா!

**எ**டுத்துக்கொள்ளும் ராகத்தை ஆதி முதல் அந்தம் வரையில் அலசிவிட்டுத் தான் அடுத்த வேலை பார்க்கிறார் டி.எம். கிருஷ்ணா! அரைகுறை வியாபாரமே கிடையாது!

மியூஸிக் அகாடமியில் கிருஷ்ணா பாடிய கரகரப்ரியாவும் காம்போதியும் அசத்தலோ அசத்தல்! விடியற்காலைப் பொழுதில் மரத்தை உலுக்கினால் மணலில் விழும் பவழமல்லிப் பூக்கள் போல் இவரது ஆலாபனைகளில் சங்கதிகள் மெத்தென்று உதிர்ந்து, மணம் பரப்புகின்றன.

'ராம நீ ஸமான மெவரு' பாடலில் (கரகரப்ரியா) தியாகராஜருக்கும், 'ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே' வில் (காம்போதி) தீட்சிதருக்கும் பூ தொடுத்து மாலை யிட்டு மரியாதை செய்தார்

அநாயாசமாகக் கையாண்டு அப்ளாஸ்களை அள்ளிச் சென்றார்!

வயலின் எஸ். வரதராஜன், மிருதங்கத்தில் திருச்சி சங்கரன், கஞ்சிராவில் புருஷோத்தமன் மூவரும் கறுப்புப் பூனைப் படை மாதிரி கூடவே பயணித்து கிருஷ்ணாவைப் பாதுகாத்தார்கள்!

கடைசியில், கால அவகாசத்தைப் புரிந்துகொள்ளாமல் சுருட்டியில் ராகம், தானம், பல்லவியை ஆரம்பித்து, இறங்கவேண்டிய ஜங்ஷன் வந்துவிட்ட டென்ஷனில் படுக்கையைச் சுருட்டுவது போல் அவசர அவசரமாக முடித்தார் கிருஷ்ணா!

துக்கடாவாக திருப்பாவை பாடவேண்டிய கொஞ்சூண்டு நேரத்தில் பல்லவியை முடிக்க